Sub Court, Eraniel **OS.No.113/2021**

<u>12.01.2023.</u>

வா.சா.3 திருமதி. ஜெலஜா

**சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை</u>

நான் வேலை பார்க்கும் பண்டகச்சாலையில் தலைவரும், 10 நிர்வாக குழு உறுப்பினர்களும் உண்டு. நான் அங்கு 23 வருடங்களாக வேலை பார்க்கிறேன். நான் தனி அலுவலர் மூலம் வேலையில் சேர்க்கப்பட்டேன். நான் 2005ம் வருடம் முதல் மணவாளக்குறிச்சி கூட்டுறவுப் பண்டகச்சாலையில் பொறுப்புச் செயலாளராக இருந்து வருகிறேன். மாதம், தேதி தெரியாது. என்னை பொறுப்புச் செயலாளராக தனி அலுவலர் நியமித்தார். வாதி தலைவராக 2013ம் வருடத்திலிருந்து தற்சமயம் வரை இருந்து வருகிறார். அதற்கு முன்பாக 1999க்கு முன்னர் இருந்துள்ளார். 1999ம் வருடத்திற்கு முன்பு எத்தனை வருடங்கள் தலைவராக இருந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் பணிபுரியும் கூட்டுறவு பண்டகச்சாலை, கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர், தக்கலை என்பவரின் கீழ் இயங்கி வருகிறது என்றால் சரிதான். எங்கள் பண்டகசாலையில் வரவு செலவு பார்வையிடுவதற்கு தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் தலைவர் தான் அதற்கு பொறுப்பு. வரவு செலவை பார்வையிடுவதற்கு தலைவருக்கு அதிகாரம் உள்ளது. எங்களுக்கு சம்பளம் தலைவர் மட்டும் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பார். தலைவர் கையெழுத்துப் போடவில்லை என்றால் எனக்கு சம்பளம் கிடைக்காது. சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை தணிக்கைச் செய்வதற்கு உதவி இயக்குனர் என்ற அதிகாரி உண்டு என்றால் சரிதான். அவருடைய அலுவலகம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ளது என்றால் சரிதான். வாதி எங்கள் சங்க தலைவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6

ஆவணம் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 25.02.2021ம் தேதி வாதி குளச்சல் நியாயவிலை கடையில் வந்து ஆவணங்களை பார்வையிட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. வாதி கையெழுத்துப் போடாவிட்டால் எனக்கு சம்பளம் கிடைக்காது என்ற பயத்தில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 27.11.2021 தேதியில் நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் 25.02.2021ம் தேதியில் வழக்கிற்காக நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கொடுத்த குற்ற வழக்கிலிருந்து வாதியை தப்பிக்க வைப்பதற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.